# கொழும்புத் தமிழ்ச் சங்கம்

(சபை வரைவுள்ளது)

**(சங்கங்களுக்கான அரச கட்டளைச் சட்டத்தின்படி பதிவு பெற்ற தமிழ் மொழிப் பண்பாட்டு அமைப்பு)**

## ஐம்பத்தாறாவது (56)
## ஆண்டுப் பொது அறிக்கை

## 1997 - 1998

தொடக்கம் :- 22-03-42 பதிவு எண் :- எஸ். பி

# கொழும்புத் தமிழ்ச் சங்கம்

## 56வது ஆண்டுப் பொது அறிக்கை

**அன்புள்ள தமிழ்ச் சங்க உறுப்பினர்களே வணக்கம்.**

*1997ம் ஆண்டு ஒட்டோபர் மாதம் 26ம் திகதி முதல் 1998ம் ஆண்டு யூன் 28ம் திகதிவரை எமது சங்கம் ஆற்றிய பணிகளை 56-வது ஆண்டுப் பொது அறிக்கையில் சமர்ப்பிக்கின்றோம்.*

### ஸ்தாபிதம்

கொழும்புத் தமிழ்ச் சங்கம் அமரர். ச.சு. பொன்னம்பல முதலியார் அவர்களின் வழிகாட்டலில் 22.3.42ல் ஸ்தாபிக்கப்பட்டது. இதன் தொடக்கத் தலைவராக இருந்தவரும் அவரே ஆவர். தமிழினதும், தமிழ் பேசுபவர்களினதும் வளமான வளர்ச்சிக்காகத் தமிழ் நாட்டிலும், இலங்கையிலும், உலக நாடுகளிலும் தமிழ்ச்சங்கங்களை அறிஞர்கள் நிறுவினர். இவ்வடிப்படையில் 1942ம் ஆண்டு இலங்கையின் தலைநகரிலேயும் தமிழ்ச் சங்கம் ஒன்றை ஸ்தாபித்தனர். 1942ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் தலைமைப் பதவியைத் திரு. அ. சபாரத்தினம் அவர்களிடம் ஒப்படைத்துச் சாதாரண தொண்டனாகப் திரு. ச.சு. பொன்னம்பலம் முதலியார் செயற்பட்டார்.

கடந்த 56 ஆண்டுகளாக இச்சங்கம், தமிழ் பேசும் மக்களின் வளர்ச்சிக்காக கொழும்பிலும், இலங்கையின் பல பாகங்களிலும் பல அரிய திட்டங்களைச் செயற்படுத்திவருகிறது.

### 01. சங்க உறுப்பினர் தொகை

| | | |
|---|---|---|
| 1. | ஆயுள் உறுப்பினர் | - 263 |
| 2. | சாதாரண உறுப்பினர் | - 118 |
| | | 381 |

### 02. கூட்டங்கள் (26.10.97 - 28.06.98)

1. ஆட்சிக்குழுக் கூட்டம் (10)
2. உபகுழுக் கூட்டங்கள்

| | | |
|---|---|---|
| கல்வி | - | 05 |
| நூல் நிலையம் | - | 04 |
| இலக்கியம் | - | 05 |

| | | |
|---|---|---|
| கட்டிடம் | - | 04 |
| யாப்புத் திருத்தம் | - | 05 |
| உறுப்புரிமை | - | 04 |
| மொத்தம் | - | 27 |

03. **முகப்புரை:-**

*சங்க அங்கத்தவர்களின் ஆசீர்வாதம், ஊக்குவிப்புடன் பல ஆக்கரீதியான பணிகளை எமது ஆட்சிக்குழுவினால் முன்னெடுக்க முடிந்திருக்கிறது என்பதைக் குறிப்பிடுவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றோம். தமிழ் இலக்கிய வளர்ச்சி மாத்திரமல்லாமல் தமிழ் பேசும் மக்களின் பண்பாட்டு வளர்ச்சியிலும் கவனம் செலுத்தியிருக்கின்றோம் எனக் குறிப்பிடுவதில் பெருமையடை கின்றோம். "அகம் மகிழ்ந்தால் தான் முகம் மலரும்" என்பதற்கமைய தமிழ்பேசும் மக்கள் படும் அவலங்களுக்கும் அழுத்தங்களுக்கும் ஈடுகொடுக்கக் கூடிய ஆக்கரீதியான முயற்சிகள் எடுப்பதற்கும் நடவடிக்கை எடுத்துவருகின்றோம்.*

04. **ஆண்டுப் பொதுக் கூட்டம்**

26.10.97 மு.ப. 10.00 மணியளவில் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் திரு. செ. குணரத்தினம் அவர்களின் தலைமையில் ஆரம்பமாகியது. திரு. செ. குணரத்தினம் சமூகமளித்த பலரின் வேண்டுகோளுக்கு இணங்க இவ்வாண்டுக் கூட்டத்தில் தலைமை வகிக்க விரும்பவில்லையெனவும், துணைத் தலைவர்களில் ஒருவரைக் கூட்டத்தைத் தொடர்ந்து நடத்துமாறும் வேண்டிக் கொண்டார். திரு. க. நீலகண்டன் ஏகமனதாகத் தற்காலிகத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

துணைப் பொதுச் செயலாளர் திரு. ஆ. பொன்னையா அவர்களினால் அறிக்கை வாசிக்கப்பட்டது.

**விபரம் இணைப்பு :01**

05. **உபகுழுக் கூட்டங்கள்**

கல்வி, நூல்நிலையம், இலக்கியம், கட்டிடம், உறுப்புரிமை, யாப்பு திருத்துதல் தொடர்பான உபகுழுக்கள், காலத்திற்குக் காலம் கூடி தமிழ்ச் சங்க வேலைகளைத் திறம்படத் திட்டமிடுவதற்கும், செய்த வேலைகளையிட்டு மீளாய்வு செய்வதற்கும் பல முறை கூடியது. இதன் காரணமாக ஆக்கரீதியான முயற்சிகளை எடுக்க முடிந்தது எனக் கூறினால் அது மிகையாகாது. திட்டமிடுதலைச் சரிவரச் செய்த



காரணத்தினால் சங்க முயற்சிகளைச் திறம்படச் செய்ய முடிந்தது என்பதைக் குறிப்பிடுவதில் பெருமை அடைகின்றோம். உபகுழுக்களின் செயலாளர்களும் அதன் அங்கத்தவர்களும் சிறப்புறச் செற்பட்டுள்ளனர்.

06. ஓம்படையார் சபையினர் காலத்திற்குக் காலம் கூடி ஆக்கரீதியான ஆலோசனைகளை முன் வைத்து வருகின்றனர். அவர்களின் அளப்பரிய சேவைக்கு நாம் என்றும் நன்றியுடையோம்.

07. **உத்தேச வரவு செலவுக் கணக்கு**

| | ரூபா | சதம் |
|---|---|---|
| உத்தேச செலவு | 36,68550. | 00 |
| உத்தேச வருமானம் | 33,13300. | 00 |
| மேலதிகச் செலவீனம் | 3,55250. | 00 |

இவ்வாண்டு பொருளாளரினால், முதல் முதலாகச் சங்க வரலாற்றில் உத்தேச வரவு செலவுக் கணக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. குறிப்பிட்ட ஆண்டில் உத்தேச வருட வருவாயாக ரூ. 33,13,300.00 எதிர்பார்க்கப்படுகிறது. உத்தேச செலவினமாக ரூபா. 36,68,550.00 செலவிடும் நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளோம். 3 லட்சம் ரூபாவுக்கு மேலாக வருவாய்க்குக் கூடிய செலவீனம் ஏற்பட இருப்பதனால் பொதுமக்கள் நலன் விரும்பிகளிடம் இருந்து இம்முதலைப் பெறுவதற்கு திட்டமிட்டுள்ளோம்.

08. ***இணைப்புக் கட்டிடம் திறப்பு விழாவும், புத்தகக் கண்காட்சியும்*** இணைப்புக் கட்டிடம் பூர்த்தியாக்கப்பட்ட திறப்பு விழா, கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. இத்திறப்பு விழாவுடன் மூன்று நாட்கள் புத்தகக் கண்காட்சியும் ஆய்வரங்குகளும் இடம் பெற்றன. தமிழ்ச் சமூகத்தினரின் வாசிக்கும் பழக்கம் குறைந்து போகும் நிலைமையைச் சீர் செய்யும் வகையிலும் ஒவ்வோர் வீட்டிலும் நூல் நிலையத்தை விருத்தி செய்யும் வகையிலும் இக் கண்காட்சி அமைந்திருந்தது.

(1) மண்டபத் திறப்பு விழாவை கொழும்பு இராமகிருஸ்ண மிஷன் முதல்வர் சுவாமி ஸ்ரீமத் ஆத்மகணானந்த அவர்கள் மங்கள விளக்கேற்றித் திறந்து வைத்தார். இதனைத் தொடர்ந்து ஆய்வரங்கு, பட்டிமன்றம், கருத்தரங்கு, கவியரங்கு, நாட்டியம், நாடகம் முதலிய அம்சங்கள் இம்மூன்று நாட்களிலும் நடைபெற்றன. இதன் மூலம் அதிக மக்கள் மத்தியில் தமிழ் சங்கத்தைப்பற்றியும், நூல் நிலையத்தைப் பற்றியும் வாசிக்கும் பழக்கம் மேலோங்க

வேண்டுமெனும் விழிப்புணர்ச்சியையும் ஏற்படுத்த முடிந்தது. இக்கட்டிடத்தை பூர்த்தி செய்வதற்குப் பலர் நன்கொடை வழங்கியிருந்தார்கள்.

**விபரம் இணைப்பு :- (2)**

(2) ***புத்தகக் கண்காட்சி :-***

(அ) சங்கத்தால் பல ஆண்டுகளாக வெளியாகிய நூல்கள் பெருந்தொகையில் இருப்பில் இருந்தமையால் இந்நூல்களை எமது சமூகம் முழுமையாகப் பயன்படுத்தும் வகையில் சங்க வெளியீடுகள் 50 வீதம் கழிவுடன் விற்கப்பட்டன. தற்போதும் அப்படியே விற்று வருகிறோம்.

(ஆ) இக் கண்காட்சியில் கொழும்பு மாநகரில் உள்ள பிரபல புத்தக நிலையங்களாகிய மக்மிலன், பூபாலசிங்கம், இன்ரமொட், சவுத் ஏசியன் புத்தகசாலை, திருமறைக் காலமன்றம், வெள்ளவத்தை என்ரப்பிறைசஸ், பம்பலப்பிட்டி எஸ் பி. புத்தக நிலையம் முதலான ஸ்தாபனங்கள் கலந்து கொண்டன.

முதலாம் மாடிக் கட்டிட வேலைகளை முன்னெடுப்பதற்கு தமிழ்ச் சங்க முன்னாள் தலைவர் திரு. பொ. சங்கரப்பிள்ளையின் குடும்பத்தினர் முன்வந்திருப்பது பாராட்டுதற்குரியது. டாக்டர். சங்கரப்பிள்ளை மனோகரன் அண்மையில் சங்கத்திற்கு திரு. J. திருச்சந்திரன் அவர்களுடன் விஜயம் செய்த போது கூடிய விரைவில் இவ்வேலையைப் முன்னெடுப்பதற்கு தமது உதவியை வழங்குவதாகத் தெரிவித்திருந்தார். அவருக்கு சங்கத்தின் சார்பில் நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

## 03. நடைபெற்ற முக்கிய நிகழ்ச்சிகள்

குறிப்பிட்ட 8 மாதக் காலத்தில் முன்னெடுக்கப்பட்ட முக்கிய நிகழ்ச்சிகளாவன:

(1) ***சம்பந்தன் சிறுகதைகள் நூல்வெளியீட்டு விழா***

(2) ***அதி இரத்த அமுக்கம் சம்பந்தமான கருத்தரங்கு***
டாக்டர் எஸ் சிவயோகன், சிரேஸ்ட விரிவுரையாளர், ஜயவர்தனபுர சர்வகலாசாலை, டாக்டர் திருமதி எஸ். மாணிக்கராசா (சுகாதார அமைச்சு) முதலானோர் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றச் சமூகம் கொடுத்திருந்தனர்.

(3) ***'சமகாலப் பிரச்சினைகளும் சைவசித்தாந்தமும்'*** ஆய்வரங்கு நடைபெற்றது. புலவர் அ. திருநாவுக்கரசு, அவர்கள் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றினார்.



(4) ***'மன அழுத்தங்களும் முகம் கொடுக்கும் வழிமுறைகளும்'*** இவை தொடர்பான பட்டறையை பேராசிரியர். டேவிட் N.இரத்தினவேல் அவர்கள் நடாத்தினார். தமிழ் பேசும் சமூகம் தற்போதைய யுத்த நிலைமையினால் ஏற்பட்ட இடப்பெயர்வு, இவை தொடர்பான விளைவுகள், புலப்பெயர்வு காரணமாக மக்கள் வெளிநாடு செல்வதனால் ஏற்படும் உளநலப்பாதிப்புக்கள், இளஞர்கள் தொழில் வாய்ப்பின்மையால் ஏற்படும் பாதிப்புக்கள், மாணவர்கல்வியை முன்னெடுக்கும் போது ஏற்படும் சிரமங்கள், சுற்றிவளைப்பு, தேடுதல், சித்திரவதை இவைகளினால் ஏற்படும் மன உளைச்சல்கள் என்பன ஆராயப்பட்டன. இத்தாக்கங்களுக்கு மக்கள் எவ்விதமாக முகம் கொடுக்க வேண்டும் என்பதும் எவை நேரிடினும் உளச் சமநிலை பேணக் கூடிய முயற்சிகள் பற்றியும் ஆராயப்பட்டன. இவற்றுள் "ஆற்றுப்படுத்தல்" (Counselling) முக்கியகாரணியாக அமைகின்றது. தமிழ் பேசும் "ஆற்றுப்படுத்துனர்" தற்போது கொழும்பிலும் அண்டியப்பிரதேங்களிலும் இல்லாநிலைமையைப் போக்கும் வகையில், பொருத்தமானவர்களைத் தெரிந்து எடுத்து அவர்களுக்கான பயிற்சி நெறியை முன்னெடுப்பதற்கு பேராசிரியர் N. இரத்னவேல் முன்வந்திருக்கின்றார். ஆரம்ப நாளில் நடைபெற்ற கருத்தரங்கில் பங்குகொண்ட சமூக சேவை யாளர்களில் 95 வீதம் ஆனோர் ஆற்றுபபடுத்துனராகப் பயிற்சி பெற விரும்புவது தெரியவந்துள்ளது.

(5) ***'இசைக் கச்சேரி'*** தென்னிந்திய கர்நாடக சங்கீத பாடகி திருமதி. குன்னக் குடி பாலாவினதும், திரு மோகன் வித்தியாவினதும் இசைக் கச்சேரி வெகு சிறப்பாக நடைபெற்றது. அவர்களின் கலைத் திறனைப் பாராட்டி குன்னக் குடிபாலா வுக்கு " இசை ஞானத் திலகம்" எனும் சிறப்புப் பட்டம் எமது கொழும்புத் தமிழ் சங்கத்தால் வழங்கப்பட்டது. திரு. மோகன் வைத்தியாவுக்கு "இசைச் சக்கரவர்த்தி" எனும் கௌரவப்பட்டம் வழங்கப்பட்டது.

(6) ***சலரோகம் சம்பந்தமான கருத்தரங்கு:-*** எம்மவர்கள் மத்தியில் சலரோகம் ஓர் முக்கியப் பிரச்சனையாகும். மக்கள மத்தியில் விழிப்புணர்சியை ஏற்படுத்தவும்,நோயாளர்கள் இந்நோயுடன் வாழ்நாள் முழுவதும் சாதாரண (Normal) வாழ்க்கை வாழ்வதற்கும் இவை தொடர்பான கல்வியின் அவசியம் உணரப்பட்டது. இவ்வகையில் மேற்படி கருத்தரங்கில் டாக்டர் எஸ் சிவயோகம் சிரேஸ்டவிரிவுரையாளர், ஜயவர்த்தனபுர

சர்வகலாசாலை (மருத்துவபீடம்) அவர்களும் டாக்டர். V முரளி (கொழும்பு மாநகர சபை) அவர்களும் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றினர்..

(7) ***யோகாசனம் சம்பந்தமான கருத்தரங்கும்* செய்முறைக் காட்சியும்:-** மக்கள் மத்தியில் அமைதியின்மை ஓர் முக்கியபிரச்சனை யாகக் காணப்படுகிறது. உளச்சுகாதாரத்தை உயர்த்தும் வகையில் திரு மு. சந்திரலிங்கம் உபஅதிபர், கப்ரின் காடின் தொண்டர் வித்தியாலயம் அவர்களும், அவர் உதவியாளர்களும் இணைந்து இக் கலந்துரையாடலிலும் செய்முறைக் காட்சியிலும் பங்கு கொண்டனர். யோகாசன வகுப்புக்கள் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும் எனும் கோரிக்கையை நாம் செயற்படுத்துவதற்காக பரிசீலித்து வருகின்றோம்.

(8) ***'தமிழ் வளர்ச்சிக்கு இலக்கணத்தின் அவசியம்'*** எனும் விடயம் சம்பந்தமான ஆய்வரங்கு நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக இலக்கணவித்தகர் திரு. இ. நமசிவாய தேசிகர் கலந்துக் கொண்டார். எழுத்துத் துறையில் ஈடுபாடு உடையவர்களும், பத்திரிகைத் துறையில் ஈடுபாடு உடையோரும் கூடுதலாகப் பங்கு கொண்டனர்.

(9) ***இலக்கிப் பேருரை*** "மதமும் கவிதையும் - தமிழ் அனுபவம்" எனும் பொருளில் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி அவர்களால், இந்து கலாசார திணைக்களத்தின் ஆதரவில் நடாத்தப் பெற்றது.

(10) ***'புலவர் மணி பெரியதம்பி'*** நூல் வெளியீடு சங்கத்தினால் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. பேராசிரியர் கா. சிவத்தம்பி, பேராசிரியர் எஸ் சந்திரசேகரம் முதலானோர் சிறப்பு விருந்தினராக வருகை தந்திருந்தனர்.

(11) ***கவிஞர் மேத்தா***, தென் இந்தியாவில் இருந்து வருகை தந்திருந்தார். அவருக்கு மகத்தான வரவேற்பும், சிறப்புப்பட்ட மளிப்பும் 17.06.98 ல் நடைபெற்றது.

(12) ***தமிழ்ச் சங்கத் தொண்டர் தெரிவும் - பயிற்சியும்*** :- தமிழ்ச் சங்கததல கல்வி, அவை தொடர்பான அபிவிருத்தி, கலை கலாச்சார நிகழ்ச்சிகள் நடைபெறும் காலங்களில் பலவித செயற்பாடுகளில் தொண்டர்களின் பணி அவசியமாகக்கருதப்பட்டது. இந் நோக்கை நிறைவு செய்வதற்கு ஆர்வமுள்ள இளைஞர்கள் சமூக சேவையாளர்கள், 24 பேர் தொடக்கத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இவர்களுக்கு ஆரம்பப்பயிற்சியளிக்கப்பட்டது. விழாக்கள், கண்காட்சி, புத்தக விற்பனை, சிரமதான முயற்சிகள் ஏற்படும் சந்தர்ப்பத்தில் இவர்களின் சேவை பெரிதும் பிரயோசனம் உள்ளதாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.



(13) ***சிரமதானப்பணி:*** –
நூலகத்தில் இரு தினங்கள் சிரமதானப்பணிகள் மேற்கொள் ளப்பட்டன. நூல்கள் தூசி தட்டுதல், வரிசையாக அடுக்குதல், இவை தொடர்பான செயற்பாடுகளில்21 தொண்டர்கள் சிறப்பாக பங்குபற்றினார்கள்

(14) ***பேராசிரியர் சு. வித்தியானந்தன் நினைவு தின விழா*** 9.5.98ல் கொண்டாடப்பட்டது. பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்களும் திரு. செ. குணரத்தினம் உபதலைவர்,கொழும்புத் தமிழ்ச் சங்கம் அவர்களும் பங்குபற்றி நினைவுப் பேருரை வழங்கினார்கள் வவுனியா கல்வியியல் கல்லூரி மாணவர்களின் நிகழ்ச்சிகள் அரங்கேறின. **அவற்றில்,**

(அ) இதய தரிசனம்
(ஆ) புரிந்துணர்வு
(இ) விழிப்புணர்வு ஆகிய 3 நாடகங்கள் சிறப்பம்சமாக அமைந் திருந்தன.

01. **கல்விச் சேவை:** சங்க மண்டபத்தில் மாணவர்களுக்கு பல தரத்துக்குறிய கல்விச் சேவை அளிக்கப்பட்டு வருகிறது. G.C.E O/L, G.C.E A/L, G.A.Q சட்டம், கணணி பொறியியல், கணக்கியல், முதலான பாடங்கள் கற்பிக்கப்பட்டு வருகின்றன.

02. **பால பண்டித, பிரவேச பண்டித வகுப்பு:** 10.04.98ல் புலவர் திரு. த. கனகரத்தினம் அவர்களின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து பிரதி சனி, ஞாயிறு, போயாதினங்களில் நடைபெற்று வருகிறது. இவ்வகுப்பில் கற்பதற்கு 41 மாணவர்கள் (பலதுறைசார்ந்தோர்) பதிவு செய்திருக்கின்றனர். புலவர் திரு. த. கனகரத்தினம் அவர்களுடன் பண்டிதர் எஸ் சுப்பிரமணியம், புலவர் அ. திருநாவுக்கரசு (B.O.L) பண்டிதர் க. சிவகுருநாதர், பண்டிதர் ஆ. பொன்னையா

முதலானோர் கற்பித்தலில் ஈடுபட்டுவருகின்றனர். வட இலங்கை சங்கீத சபையின் ஆதரவில் இவர்களுக்கான பரீட்சை நடாத்துவதற்கு முயற்சிகள் செய்யப்படுகின்றன.

03. **இசை வகுப்புக்கள்:-** கர்நாடக, சங்கீதம் வயலின், புல்லாங்குழல், மிருதங்கம், முதலான வகுப்புக்கள் நடாத்துவதற்கு நட்வடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

04. **நாடகமும் அரங்கியலும்:-** பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன. ஆங்கிலம், சிங்களம், - ஆகிய மொழிகளும் கற்பிக்கப்பட்டு வருகின்றன.

05. **தமிழ் கற்பித்தல்:-** தமிழைத் தாய் மொழியாகக் கொள்ளாதவர்கள் தமிழ் கற்பதற்கு விருப்பம் தெரிவித்திருகின்றனா. அத்துடன் தமிழ் பேசும் சமூகத்தைச் சேர்ந்தவர்களும் சரிவர எழுத, வாசிக்கப் பேச முடியாத நிலைமையில் இருப்பதையும் காணக் கூடியதாக இருக்கின்றது. இவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்கில் தமிழ் கற்பிப்பதற்கும் உத்தேசிக்கப்பட்டு வருகிறது.

06. ***ஆய்வரங்கு, கவியரங்கு, பட்டிமன்றம், நடனம், நாடக நிகழ்ச்சிகள்***
10.04.98 தொடக்கம் 12-04-98 அடங்கிய மூன்று நாட்களிலும் மு.ப. 9.30 தொடக்கம் மாலை 8.30 வரை ஆய்வரங்கு, கவியரங்கு, பட்டிமன்றம் முதலான நிகழ்ச்சிகள் தலைவர் திரு. இ. சிவகுருநாதன், கொழும்புத் தமிழ்ச் சங்கம், அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. விபரங்கள் வருமாறு:-

## *10.04.98 - வெள்ளிக்கிழமை*

01. **ஆய்வரங்கு (1)**
*' தமிழ்ப்பண்பாட்டு உருவாக்கத்தில் நூல்கள்'*
உரை - பேராசிரியர் - கா. சிவத்தம்பி
கருத்துரை - ஜனாப் எம். நகியா
இதைத் தொடர்ந்து பங்கு கொண்டோருடனான கருத்தாடல் இடம்பெற்றது. மக்கள் மத்தியில் வாசிக்கும் பழக்கம் குறைவடைந்து போவதையும், மக்களை வாசிப்பதற்கு ஊக்குவிப்பதற்கான முயற்சிகள் பற்றியும் ஆராயப்பட்டன.



02. **ஆய்வரங்கு (2)**
*'தமிழ் நூல் வெளியீட்டுத் துறையில் கொழும்புத் தமிழ்ச் சங்க முயற்சிகள்'*
உரை :- குமாரசாமி சோமசுந்தரம்
கருத்துரை:- புலவர். அ. திருநாவுக்கரசு
இதைத் தொடர்ந்து சபையோருடனான கருத்தாடல் இடம் பெற்றது பலநூற்றுக்கணக்கான நூல்கள் தற்போது விற்கப்படாமல் இருப்பதையும், அவற்றை விற்பதற்கான முயற்சிகளும் ஆராயப்பட்டன.

03. **ஆய்வரங்கு (3)**
*' சமகாலத் தமிழ்நூல் வெளியீட்டுத்துறையும் எதிர் கொள்ளும் பிரச்சனைகளும்'.*
உரை:- தெ. மதுசூதனன்
கருத்துரை:- க. சண்முகலிங்கம்
தமிழ் நூல் வெளியீட்டுத்துறையில் எழுத்தாளர்கள் வெளியீட்டாளர்கள் முகம் கொடுக்கும் பிரச்சனைகளும் அவற்றை அணுகுவதற்கான வழிமுறைகளும் ஆராயப்பட்டன.

## 11.4.98 - சனிக்கிழமை

01. பாடசாலை மாணவர்களின் "தனிமனித ஆளுமை விருத்தியில் ஆத்மீகத்தின் பங்கு" எனும் பொருள் பற்றிய பேச்சுப் போட்டி நடைபெற்றது. கொழும்பு மாவட்ட பாடசாலை மாணவர்கள் பங்குபற்றினர். சிறப்பாகப் பங்கு பற்றிய மாணவர்கள் யாவருக்கும் சான்றிதழ்களும் தமிழ்ச் சங்க வெளியீட்டு நூல்களும் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

02. ***மாணவர்களுக்கான 'எழுந்தமான பேச்சுப்போட்டி நடைபெற்றது.***
30 மாணவர்கள் வரையில் பங்கு கொண்டனர். சிறப்பாகப் பங்குபற்றிய முதல்மூன்று மாணவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன.

3. **ஆய்வரங்கு (4)**
*' தமிழியல் ஆய்வில் சிறப்பு நூலகம்'*
உரை :- செ. யோகராசா
கருத்துரை :- திரு. ஆ. சிவனேசச்செல்வன்
கருத்தாடல் :- இவைகளைத் தொடர்ந்து சகம் கொடுத்தோரின் கருத்தாடல் இடம் பெற்றது.

04. **ஆய்வரங்கு (5)**
"மறைந்த படைப்பாளிகள் வரிசையில், கே. டானியல் அவர்கள்"
தலைமை:- தெ. மதுசூதனன்
உரை :-(1) ந. இரவீந்திரன்

"டானியலின் படைப்புக்களில் சமூகநோக்கு"

உரை:-(2) எஸ் ரஞ்சகுமார்

"டானியலின் படைப்புக்களில் உண்மையும் உணர்வும்"

இக்கருத்துரைகளைத் தொடர்ந்து சபையோரின் கருத்தாடல் இடம் பெற்றது.

## 12.4.98 (ஞாயிறு) ஆய்வரங்கு (6)

*'தமிழ் பேசும் மக்களின் சமூகவியல் பிரச்சனைகள்'*

(1) உரை:- கலாநிதி செல்வி திருச்சந்திரன்

கருத்துரை:- சாந்தி சச்சிதானந்தம்

இக் கருத்துரைகளைத் தொடர்ந்து சபையோரின் கருத்தாடல் இடம் பெற்றது

(1) **கலைநிகழ்ச்சிகள்**

(i) ***கவியரங்கு 'சங்கேமுழங்கு'***

தலைமை திரு. K. K. உதயகுமார்

கவிஞர்கள் எஸ் நிலக்ஷன் சி.ஜ. அஷியான

ஜி.எஸ் சேதுகாவலர் ஆர் பி. வாமலோசனன்

(ii) ***விவாதம்*** :- தொடர்பு சாதனங்கள் இனங்களுக்கிடையே புரிந்துணர்வை ஏற்படுத்தத் தவறிவிட்டன / தவறவில்லை திரு. S. முகுந்தன் தலைமையில் இவ்விவாதம் இடம் பெற்றது.

(iii) ***நடனம் :-*** கிருலப்பனை கலைக் கோயில் நாட்டியாலயம் தயாரித்து வழங்கிய செல்வி ஜீட்னிஸ் செல்லையா அவர்களின் மாணவிகளின் நடன நிகழ்ச்சிகள் இடம் பெற்றன.

(iv) ***நாடகம் :-*** கொழும்புத் தமிழ்ச் சங்க கல்விப் பிரிவுப் பழைய மாணவர்கள் பங்குபற்றிய "கண்ணிரண்டும் விற்று" எனும் நாடகமும் இடம் பெற்றது.

04. **நூலகச் சேவைகள்:-**

**1. நூல் நிலையம்:-**

இலங்கையில் தற்போது உள்ள நூல் நிலையங்கள் சிலவற்றுள், கொழும்புத் தமிழ்ச் சங்க நூல் நிலையமும் அதி சிறந்த நூல் நிலையமாகக் கருதப்படுகிறது. மிகவும் அரிதான பழைய பல நூல்கள் இந்நூல் நிலையத்தில் இருப்பது குறிப்பிடத்தக்க ஓர் முக்கிய



அம்சமாகும். இன்று வரை இந் நூல் நிலையத்தில் 17,232 நூல்கள சேர்ந்துள்ளன, குறிப்பிட்ட கால எல்லைக்குள் 91 நூல்கள் கொள்வனவு செய்துள்ளோம். அன்பளிப்புச் செய்த நூல்களின் எண்ணிக்கை - 267 அன்பளிப்புச் செய்தோர் விபரம் இணைக்கப்பட்டுள்ளச

**இணைப்பு 3.**

இந்நூல் நிலையத்தில் மாதா மாதம் பின்வரும் சஞ்சிகைகளைக் கடந்த 9 மாதங்களாக வழங்கி வருகின்றனர் அவையாவன:-

(அ) இந்தியாடுடே, குமுதம், துக்ளக் - திரு. க. குமரன்

(ஆ) ஆனந்த விகடன் - திரு K. K. உதயகுமார்

(இ) இராமகிருஸ்ணவிஜயும், விவேகவாணி - திரு க. செந்தில் மனோகரன்.

(ஈ) வெளிநாட்டுச் சஞ்சிகைகள்:- விபரங்களாவன

| | | |
|---|---|---|
| சர்வதேச தமிழர் | - | N.S. பிரபு- Norway |
| "India" | - | இலங்கை இந்தியத் தூதரகம் |
| Samvad | - | இலங்கை இந்தியத் தூதரகம் |
| தமிழ் மாருதம் | - | டாக்டர். சாம்பசிவனார் " தமிழ் மாருதம் " மதுரை. |
| மெய்கண்டார் | - | திருவாவடுதுறை ஆதீனம் |
| செந்தமிழ்ச் "செல்வி- | | திரு. இ. முத்துக்குமாரசாமி சென்னை |

**2. பத்திரிகைப் படிப்பகம்**

புதிய இணைப்புக் கட்டிடம் திறந்த பின்பு தினசரிப் த்திரிகைகளை வாசகர்கள் ஆறுதலாக இருந்து வாசிக்கக் கூடிய வகையில் இடம் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. ஆசன ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளன. பல வாசகர்கள் இதன் மூலம் பலன் அடைய முடிகின்றது.

**3. நூலகர் சேவை:-**

நூலகர் திருமதி. அ. ஜெயசிறி கடந்த 4 மாதங்களாகத் தனித்துக் கடமையைச் சிறப்பாக ஆற்றியுள்ளார். 1.6.98 தொடக்கம் செல்வி. த. ஜெயமாலா என்பவர் உதவி நூலகராக நியமிக்கப்பட் டுள்ளார். எனவே மக்களின் நீண்ட நாட்கோரிக்கைகளாக விளங்கிய பின்வரும் அம்சங்களை நிறைவு செய்யப்பட்டுள்ளன.

(அ) நூல் நிலையம் கிழமையில் 7 நாட்களும் திறக்கப்படும்
(ஆ) மு.ப. 9.00 - பி.ப. 6.00 மணி வரை திறந்திருக்கும்.

4. **வாசகர் வட்டம்:-**
கடந்த இரு மாதங்களுக்கு முன்பு நூல் நிலைய சேவையை விஸ்தரிக்கும் நோக்குடனும் சேவையின் தரத்தை உயர்த்தும் நோக்குடனும் "வாசகர் வட்டம்" அமைத்துள்ளோம். இவ்வாசகர் வட்டத்தின் அனுசரணையுடன் மாதா மாதம் கருத்தரங்கு,- கவியரங்கு, சொற்பொழிவுகள் நடாத்தும் முயற்சிகளும் மேற்கொண்டுள்ளோம்.

04. 5. **விற்பனை நிலையம்:-**
தற்போது எமது நூல் நிலையத்தில் சங்கத்தால் வெளியிடப்படும் நூல்களுடன் தமிழ் இலக்கியம், தமிழ் மொழி தொடர்பான-நூல்களையும் விற்கக் கூடிய வகையில் விற்பனைப்பிரிவும் ஸ்தாபிக்கப்பட்டு இருக்கிறது.

05. 1. **நிகழ இருப்பவைகள்:-**
**கவிஞர் வாரம் :-** யூலை 6-12 வரை கொழும்புத் தமிழ்ச் சங்கத்தால் கவிஞர் வாரம் கொண்டாடுவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டள்ளன.

2. **(1) வன்னித் தமிழ்த் திறன் விழா:-** 1996ம் ஆண்டு நடைபெற்ற தமிழ் திறன் விழாவுக்கான பரிசில்கள் இதுவரை வழங்கப்படவில்லை. இவை தொடர்பான சஞ்சிகையும் வெளியிட முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. ஆகஸ்ட் 1998 பிற்பகுதியில் இவ்விழாவினை வவுனியாவில் நடாத்துவதற்கு முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

**(2) கிளிநொச்சி, மன்னார்,** முல்லைத் தீவப்பகுதியில் இருந்து பரிசுகள் பெற்றவர்களுக்கு உரிய பரிசில்களை முற்கூட்டியே அனுப்புவதற்கு நடவடிக்கை மேற் கொண்டுள்ளோம். போக்குவரத்துப் பிரச்சனை, யத்தச் சூழ் நிலை காரணத்தினால் இவ்விதம் தீர்மானித்துள்ளோம். வவுனியா மாவட்டத்தில் சம்பந்தப் பட்டவர்களை இணைத்ததாக இப்பரிசளிப்பு விழா நிகழ இருக்கிறது.



**(3) மாதாந்த இலக்கியக் கருத்தரங்கு,** கவியரங்கு, சிறப்புச் சொற் பொழிவு, பட்டிமன்றம் முதலான நிகழ்ச்சிகள் நடாத்துவதற்கு ஒழுங்குகள் செய்கின்றோம்.

**(4) சமூக நலன்** தொடர்பான விடயங்களில் கவனம் செலுத்துவதற்கும் திட்டங்களை தீட்டியுள்ளோம். தற்போது மன அழுத்தம் காரணமாக நம் மக்கள் அவதிப்படுகின்றார்கள். தமிழில் ஆற்றப்படுத்துனர் இல்லாநிலையைப் போக்கும் வகையில் பேராசிரியர் டேவிட் N. இரத்னவேல் அவர்களின் வழிகாட்டலில் இப்பயிற்சி நெறியை முன்னெடுப்பதற்கு முயற்சிகள் மேற் கொண்டுள்ளோம்.

**(5) கண்பார்வை** குறைந்தவர்களுக்கான பரிசோதனை, வெள்ளவத்தை லயன்ஸ் கழகத்தினருடன் இணைந்து நடாத்தல், அதி இரத்த அமுக்கப் பரிசோதனை முதலான அம்சங்களைச் செயற்படுத்தவும் முயற்சிகள் மேற்கொண்டுள்ளோம். இவை தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

5. **(6) உறவுகளும்,** உணர்வுகளும், உணவுப் பழக்க வழக்கம், அதியூட்டமும் அதனால் ஏற்படும் பாதிப்புக்கள், அதிதீவிரச் சுவாகத் தொகுதி நோய்கள் இவை தொடர்பான விடயங்களில் கருத்தரங்கு நடாத்துவதற்கும் தீர்மானித்துள்ளோம்.

6. **சங்கம்-** தொடர்பான வழக்குகள்: திரு K. R. K. கந்தசாமி அவர்களால் திரு எஸ் குணரத்தினம், திரு ஆ. பென்னையா, திரு P. பரமபாதர் முன்னைய தலைவர், துணைப் பொதுச் செயலாளர், பொருளாளர் ஆகியோருக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கு நீதிமன்றில் சமரசமாகத் தீர்த்து வைக்கப்பட்டமை குறிப்பிடற்குரியது.

7. **[illegible]யார் இலக்கிய** வெளியீடுகளுக்கு உதவுதல்:-
[illegible]ழ்ச் சங்கத்தில் எழுத்தாளர், வெளியீட்டாளர் பலர் நூல வெளியிடுவதற்கு அனுமதி கோரும் போது குறைந்த கட்டணத்தில் மண்டபத்தை வாடகைக்குக் கொடுத்து நூல்களை வெளியிடுவதற்கு உதவி வருகின்றோம்.

8. 1. கட்டிடத்தின் பின்வரும் பராபரிப்பு வேலைகள உடனடி

யாக நிறைவேற்ற வேண்டியுள்ளன.

(அ) கட்டிட முன்பகுதி இரும்பு யன்னல்கள் துருப்பிடித்த நிலையில் உள்ளன. இவை உரசி மை பூசப்படல் வேண்டும்.

(ஆ) சுவர்களுக்கு வெள்ளை நிற மை பூசப்படல் வேண்டும்

(இ) நூலக யன்னல் கதவுகள் போடப்படல் வேண்டும்

(ஈ) மேற்குப்புற மதிற்சுவர் 10' அடி உயரத்திற்க உயர்த்திக் கட்டுப்படல் வேண்டும்.

(உ) இணைப்புக் கட்டிடத்திற்கு 6 மேலதிக மின் விசிறிகள் போடப்படல் வேண்டும்.

2. திரு எஸ் துரைராசா அவர்கள் (ஆட்சிக் குழு உறுப்பினர்) கேட்போர் கூட்டத்திற்கு தமது செலவில் ஓர் புதிய மின் விசிறி பொருத்தியுள்ளார். அத்துடன் ஓர் ரியூப்பலையிற்றும் பொருத்தியுள்ளார்.

3. மரத்தளபாடங்கள் பழுதடைந்த நிலையில் இருந்தன. அவையாவும் திருத்தி தற்போது பாவனையில் விடப்பட்டு இருக்கின்றன.

9. **நினைவு கூரல்**

அமரர் M.P நடேசன் அவர்கள் - சங்கத்தின் உபதலைவர்களில் ஒருவரும், இச் சங்கத்தின் நீண்ட நாள் உறுப்பினரும் ஆகிய திரு M.Pநடேசன் அவர்கள் அண்மையில் காலமானார். அன்னார் சங்க அபிவிருத்தி முயற்சிகளுக்கு அயராது உழைத்தவர். அன்னாரின் ஆத்ம சாந்திக்கு பிராத்திக்கின்றோம்.

10. **சங்க அலுவலகம்:-**

நிர்வாக செயலாளர், தட்டெழுத்தாளர், ஆகியோர் அர்ப்பணிப்புடன் சேவையாற்றுவதனால் இச்சங்கம் ஸ்தாபன ரீதியாக வளர்ச்சியடைவதற்கு ஏதுவாக இருக்கிறது. அலுவலகத்திற்கு ஓர் பொருத்தமான உதவியாளரை எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றோம். இதன் மூலம் அலுவலகப் பணிமேலும் விரிவடைய முடியும் என எதிர்பார்க்கின்றோம்.

**வரும் காலத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள முக்கிய நிகழ்ச்சிகள்:-**

***சங்க நாள் விழா*** - மார்ச் மாதம் 23ம் திகதி வருடா வருடம் சிறப்பாகக் கொண்டாட நடவடிக்கையெடுத்தல்.



2. முஸ்லிம், கிறிஸ்தவ பெருமக்கள் கூடுதலாகப் பங்கு கொண்டுவருகின்றனர். இச் செயற்திட்டம் மேலும் விரிவுபடுத்தப்படும். மட்டக்களப்பு, திருமலை மலையகம் முதலான இடங்களை உள்ளடக்கியதாக முயற்சிகள் முன்னெடுக்கப்படும்.

3. ***உலகப் பண்பாட்டு*** நிலையங்களுடன் கூடிய தொடர்புகள் ஏற்படுத்தப்படும். அத்துடன் புலம் பெயர்ந்து செல்லும் தமிழ் மக்களின் தகவல்மையமாக இந்நிலையம் இயங்கும்.

4. ***தமிழ் இலக்கியம்*** தொடர்பானபுலமைப் பரிசில்கள் வழங்குவதற்கு நடவடிக்கையெடுக்கப்படும்.

5. ***ஆற்றுப்படுத்துனர் பயிற்சியும் – பணியும்***

தமிழ் பேசும் மக்கள் நீண்ட கால இடம் பெயர்வினால் உயிரிழைப்புக்கள் மாத்திரமல்லாமல், பொருள் இழப்புக்களுக்கும் ஆளாகிக் கொண்டு இருக்கிறார்கள். அவை மாத்திரமல்லாமல் மனம் உடைந்து பலவித மன அழுத்தங்களுக்கும் முகம் கொடுக்க வேண்டிய நிர்பந்தம் உருவாகிக் கொண்டுவருகிறது. இம் மக்கள் மத்தியில் தற்கொலையும், தற்கொலை எத்தனிப்பும் கூடிக் கொண்டே போகின்றது. இவற்றுக்கு, ஈடுகொடுக்கும் வகையில் தமிழ்பேசும் " ஆற்றுப்படுத்துனர்களை" பயிற்றுவிப்பதற்கும் முயற்சிகள் மேற்கொண்டு வருகிறோம்.

6. ***நவீன முறையில்*** (கொம்பியூட்டர்) அச்சகம் நிறுவுவதற்கும் தமிழ் நூல்கள் வெளியிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கின்றோம்.

7. ***'புலமைக் கல்வி நிலையம்'*** வசதி குறைவான மாணவர்களை இனம் கண்டு, அவர்களுக்கு உணவு உடை உறைவிட வசதி அளித்துக் கல்வியை முன் எடுப்பதற்கும் ஆலோசித்து வருகின்றோம்.

12. ***இவ்வாண்டில்*** சேர்த்துக்" கொள்ளப்பட்ட புதிய அங்கத்தவர்கள்:-

1. **ஆயுள் உறுப்பினர்கள்:-**
   1. திரு. மாணிக்கம் தவயோகராசா
   2. திரு K.S. இரத்தினவேல்
   3. திரு. M. தேவராஜா
   4. திரு. வைத்திலிங்கம் கனகரத்தினம்
   5. திரு. குமாராசாமி ஸ்ரீஸ்கந்தராஜா
   6. திரு. நாகசுந்தரம் பஞ்சாட்சரம்
   7. திரு. கந்தையா அருணாசலம்
2. **சாதாரண உறுப்பினர்கள்**
   1. திரு. நாகலிங்கம் நடராசா
   2. திரு. முருகுப்பிள்ளை பாலசுப்பிரமணியம்

3. திரு. சதாசிவம் ஜீவாகரன்
4. செல்வி. குமாரலட்சுமி குமாரசிங்கம்
5. திரு. பரமநாதன் ஜெயகுமாரன்
6. திரு. சின்னையா அமிர்தலிங்கம்
7. திரு. வயித்தீஸ்வரன் சிவசோதி
8. திரு. தியாகராசா கேசவன்
9. திரு. கனகசபாபதி நாகேஸ்வரன்
10. திரு. வைத்திலிங்கம் சபாபதி செந்தில்நாதன்
11. திருமதி. பூரணம் ஏனாதிநாதன்

3. **தொடர் மதிப்பீடும் / சிபார்சும்**

**1. நூலகம்**

(அ) நூலகர்கள் - முன்னுரிமை அடிப்படையில் தேசிய நூலக சேவைகள் ஸ்தாபனத்தினால் நடாத்தப்படும் பயிற்சி நெறியில் பங்கு பற்ற ஆவன செய்தல் மிகவும் இன்றியமையாததாகக் கருதப்படுகிறது.

(ஆ) பெருந் தொகையான பழமையான தமிழ் நூல்கள் பல உள்ளன. இந்நிலையத்தில் இதுவரை நூல்கள் வகைப்படுத்தப்படாமை (Classification) ஓர் பெரிய குறைபாடாகவே உள்ளது. அனுபவமுள்ள சேவையாளர்கள் மனமுவந்து இச்சேவையை நிறைவு செய்ய முன் வரல் வேண்டும்

2. ***பொது மக்களின் ஆலோசனைகளும் / மதிப்பீடும்:-*** இச்சங்கம் இன்னும் பல நிலைகளில் முன்னேற்றம் அடைய இடம் உண்டு. தற்போது நடைபெறும் நிகழ்ச்சிகள், முயற்சிகள் முதலியவற்றில் குறைகளும் இருக்கமுடியும். தங்கள் ஆலோசனைகளை இதற்கெனவைக்கப்பட்டுள்ள ஆலோசனைப் பெட்டியில் இடலாம். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள புத்தகத்தில் குறிப்பிடலாம். அல்லது நேரடியாகச் சமூகம் கொடுத்து எம்முடன் கலந்துரையாடுவதன் மூலம் ஆக்கரீதியான விமர்சனங்களைச் செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. பெயர் குறிப்பிடப்படாத கடிதங்கள எழுதுவதைத் தவிர்ப்பது விரும்பத்தக்கது.

14. **நன்றியுரை:-**

1. ***ஓம்படையார் சபை:-*** ஓம்படையார் சபைச் செயலாளர்



திரு. வே. கந்தசாமியுடன் திரு. இ. சிவராசா, திரு.இ.இராச ரத்தினம் முதலானோர் 1995 - 1997 ஆண்டு கணக்க றிக்கைகள் பரிசீலித்து ஆக்கரீதியான நடவடிக்கையெடுப்பதற்கு உதவி புரிந்தமைக்கு எமது மனமார்ந்தநன்றிகள். அத்தடன் அதன் தலைவர் திருமதி செல்வி. திருச்சந்திரன் அவர்களும் ஏனைய உறுப்பினர்களும் சங்கச் செயற்பாடுகளைச் சரிவர செயற்படுத்துவதற்குத் துணையாய் உள்ளனர். அவர்களுக்கு எமது நன்றிகள

2. ***இணைப்புக் கட்டிடம் பூர்த்தியாக்கல்*** - இக் கட்டிடத்தைப் பூர்த்தியாக்குவதற்குப் பல பெரியோர்களும், நலன்விரும்பிகளும் தம்மாலான நிதி கொடுத்து உதவிசெய்துள்ளார்கள். அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள். இக்கட்டிடத்தைச் சரிவர வடிவமைப்பதில் ஈடுபட்டவர்களுக்கும் கட்டிடக்குழுவினருக்கும் எமது நன்றிகள். கட்டிட திறப்பு விழாவையொட்டிய ஆய்வரங்கு,கவியரங்கு, இயல், இசை, அரங்குகள், சிறப்புற அமைய உதவிய யாவருக்கும் எமது நன்றிகள்.

3. காலத்துக்குக் காலம் சமூக அபிவிருத்தி தொடர்பான பல கருத்துக்களை வழங்கி உதவிய விடய ஆலோசகர்கள் யாவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

4. தமிழ்ச் சங்கம் - தமிழ் பேசும் மக்களின் சொத்து, இச் சங்கம் பல துறைகளிலும் தமது ஆக்கப் பணிகளை முன்னெடுக்க உதவிய சங்க அங்கத்தவர்களுக்கும், ஏனைய பெரியோர்களுக்கும் எமது பணிவான நன்றிகள்.

5. சங்கத்தில் "தொண்டர் சேவை" செய்ய முன்வந்திருக்கும் இளைஞர், யுவதிகளுக்கும், ஏனைய சமூகசேவையாளர்களுக்கும் எமது நன்றிகள்.

சங்கக் காப்பாளர் பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்களும், ஏனைய துணைக் காப்பாளர்களும் காலத்திற்குக் காலம் ஆக்கரீதியான ஆலோசனைகளை முன் வைத்து வருகின்றார்கள். அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

7. ***சங்கத்தின் உப குழுக்கள்*** - கல்வி, இலக்கியம், உறுப்பு ரிமை நூல் நிலையம், யாப்புத் திருத்தங்கள், கட்டிடம் இவை தொடர்பான உபகுழுக்களின் சேவை - பாராட்ப்பட வேண்டியதாகும். குழுக்களின் கூட்டு முயற்சியால் பலதீர்மானங்கள் எடுத்துச்செயற்படத் துணையாய் உள்ளன. உபகுழுக்களின் சேவைகளுக்கு எமது மனமார்ந்த நன்றிகள்.

8. சங்கத்தின் தலைவர், பொருளாளர் உட்பட ஆட்சிக் குழு உறுப்பினர்களின் அயராத உழைப்பினால் இவ்வாண்டில் பல அரிய பணிகளை முன்னெடுக்க முடிந்துள்ளது. குறைகள் இருப்பின் ஆக்கரீதியான ஆலோசனை களை ஆட்சிக் குழுவுக்கு முன்வைப்பதன் மூலம் இச் சங்கப் பணிகள் மென்மேலும் சிறப்புற அமையும் என்பது எமது திடமான நம்பிக்கை ஆட்சிக்குழுவுக்கு நன்றி.

9. ***வெகுஜனத் தொடர்பு சாதனங்களின் பங்கு***:- மக்கள் மத்தியில் தமிழ்ச் சங்கம் தொடர்பாகவும், அங்கு நடைபெறும் நிகழ்ச்சிகள் தொடர்பாகவும் பல ஆக்கரீதியான செய்திகளையும், விமர்சனங்களையும், கட்டுரைகளையும் வெளியிட்டு உதவிய தினசரிப் பத்திரிகைகளுக்கும், வாரச் சஞ்சிகைகளுக்கும், வானொலி, தொலைத் தொடர்பு கூட்டுத் தாபனங்களுக்கும் எமது நன்றிகள்.
திரு. S. நடராசா, திரு. A. சிவனேசக் செல்வன். திரு இராஜ. சிறிகாந்தன், திரு. V. N. மதியழகன், திரு S. வன்னியகுலம். படப்பிடிப்பாளர் திரு. அ. இராமலிங்கம் முதலானோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள். இதன் மூலம் மக்கள் மத்தியில் தமிழ், தமிழ் இலக்கியம், தமிழ் அபிவிருத்தி சம்பந்தமான விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த முடிந்துள்ளது என்பதில் பெருமை அடைகின்றோம்.

நன்றி.

| | |
|---|---|
| 7, 57ம் ஒழுங்கை | **சோ. தேவராஜா** |
| கொழும்பு 6, | பொதுச் செயலாளர் |
| 1.8.98 | கொழும்புத் தமிழ் சங்கம் |



# இணைப்பு 03

*காப்பாளர்*
*பேராசிரியர். கா. சிவத்தம்பி*

## துணைக்காப்பாளர்கள்

1. ஜனாப் S. H. M. ஜமீல்
2. திரு. தெ. ஈஸ்வரன்
3. திரு. V. S. துரைராசா
4. அருட்திரு. மரிய சேவியர் அடிகளார்

## ஓம்படையார் சபை

கலாநிதி திருமதி. செல்வி திருச்சந்திரன் - தலைவர்
திரு. வே. கந்தசாமி - கௌரவ செயலாளர்
திரு. K. K. கனகராசா
திரு. K. K. சுப்பிரமணியம்
திரு. இரா. நடராசா

## ஆட்சிக் குழு

1. **தலைவர்**
   திரு. ஆர். சிவகுருநாதன்
2. **பொதுச் செயலாளர்**
   திரு. சோ. தேவராஜா
3. **உபதலைவர்கள்**
   01. திரு. க. சோமசுந்தரம்
   02. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம்
   03. திரு. செ. குணரத்தினம்
   04. திரு. பெ. விஜயரத்தினம்
   05. திரு. ஆ. பொன்னையா
   06. திரு. க. நீலகண்டன்
   07. திரு. இரா. மயில்வாகனம்
   08. திரு. S. M. உறனிபா
